Tourist Bungalows

*534 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether a number of Tourist Bungalows are proposed to be built in this State during 1971-72; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்:

(அ) ஆம்.

(இ) 'தமிழ் நாடு டூரிஸம் டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் லிமிடெட்', 1971-72-ல் கீழ்க்கண்ட இடங்களில் சுற்றுலா மாளிகைகள் கட்ட உத்தேசித்துள்ளது:—

(1) ஊட்டி. (அடிஷனல் டார்மிட்டரி அக்காமடேஷன் இன்-டூரிஸ்ட் பங்களா.)

(2) ஹொகனேக்கல்.

(3) குற்றாலம்.

(4) மகாபலிபுரம்.

(5) ஏர்க்காடில் ஒரு சுற்றுலா மாளிகை.

திரு. என். டென்னிஸ்: எந்த அடிப்படையில் இவைகளைக் கட்டுவதற்கான இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: சுற்றுலாவிற்கு மக்களைக் கவரத்தக்க இடங்களை தமிழக அரசு தேர்ந்தெடுத்திருக்கிறது. அந்த அடிப்படையில்தான் இந்த இடங்களைத் தேர்ந்தெடுத்து கட்டடங்கள் கட்டப்படுகின்றன.

திரு. கு. காமாட்சி: இத்திட்டத்தில் கல்லணையில் ஒரு சுற்றுலா மாளிகை கட்ட உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அதற்கான திட்டங்கள் இருக்கின்றன. அடுத்த ஆண்டு கவனிக்கப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: குற்றாலத்தில் பஸ் ஸ்டாண்டிற்கு மேலே சில கட்டடங்கள் கட்டப்பட்டு பாத் ரூம் தண்ணீர் ரூமிற்கு வருகிறது. இனிமேல் கட்டும் கட்டடங்களில் இப்படிப்பட்ட குறைகள் ஏற்படுவதை நீக்கி ஒழுங்கானமுறையில் கட்டுவதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: குற்றாலத்தில் இருக்கிற நகரியம் ஆர்.டி.எல்.ஏ. டிப்பார்ட்மென்டின்கீழ் வருகிறது. என் இலாகாவில் இல்லை.

திரு. தோப்பூர் திருவேங்கடம்: வட ஆர்க்காடு மாவட்டத்தில் எதுவும் இதில் குறிப்பிடப்படவில்லை. ஆகவே வட ஆர்க்காடு மாவட்டத்தில் இப்படிப்பட்ட சுற்றுலா மாளிகை ஏற்படுத்த் திட்டமிருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: வட ஆற்காடு மாவட்டத்தில் சுற்றுலாப் பயணிகளைக் கவரத் தக்க இடங்கள் தேடப்பட்டுக் கொண்டுவருகின்றன. தேடப்பட்ட பிறகு பரிசீலிக்கப்படும்.

1971 டிசம்பர் 17]

TThiru B. VENKATASWAMI : May I know from the Hon. Minister when Hogenakal tourist bungalow will be completed and what is the estimate for the same?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : ஹொகனக்கல டூரிஸ்ட் பங்களா விற்கு தற்போது ரூ. 2½ லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. த. சோணையா : தினம் தினம் பல்லாயிரக்கணக்கான மக்கள் ராமேஸ்வரத்திற்குச் செல்கிறார்கள். அதிலும் இந்தியா முழுமையிலுமிருந்து வந்து செல்கிறார்கள். எனவே அந்த இடத்தில் ஒரு சுற்றுலா மாளிகை அமைக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : ராமேஸ்வரத்தில் சுற்றுலா மாளிகை கட்டுவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுவிட்டன. அதற்காக ரூ. ஐந்து லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. விரைவில் அதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கவுண்டர் வகுப்பினர்

* 535 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கவுண்டர் சமூகத்தினரை பிற்பட்டோர் பிரிவில் சேர்க்கப்பட வேண்டும் என அரசுக்கு விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) கொங்கு வேளாளக் கவுண்டர் வகுப்பினரிடமிருந்தும், வேளாளக் கவுண்டர் வகுப்பினரிடமிருந்தும் முறையீடுகள் வந்துள்ளன. நாட்டு வேளாளக் கவுண்டர் வகுப்பு என்று அழைக்கப்படுகிற கொங்கு வேளாளக் கவுண்டர் வகுப்பு வேளாளக் கவுண்டர் வகுப்பின் ஒரு பிரிவே ஆகும்.

(இ) பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் 'வேளாளக் கவுண்டர்' வகுப்பினைச் சேர்த்துக்கொள்ளலாமென பின்தங்கிய வகுப்பினர் ஆணைக்குழு பரிவுரை செய்யவில்லை, ஆணைக் குழுவின் பரிவுரைகளை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

திரு. சு. துரைசாமி : நமது அரசாங்கம் ஜாதி மத வேறுபாடு இல்லாத அரசாங்கமாகும். இந்த பிற்பட்டோர் பட்டியலில் பல சமூகத்தினர் சேர்க்கப்பட்டு, பெரிய நிலச் சொந்தக்காரர்கள், தொழில் அதிபர்கள் ஆகியவர்களின் குழந்தைகளுக்கு கல்விச் சலுகைகளும், உத்தியோகச் சலுகைகளும் தரப்படுகின்றன. ஆனால் கவுண்டர் சமூகத்தினர், விவசாயத் தொழிலாளர்களாகவும், தொழிற்சாலைத் தொழிலாளர்களாகவும் அதிகப்படியானபேர்கள் இருக்கக்கூடிய இந்த சமுதாயத்தை பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்காத காரணத்தினால் அச்சமுதாயத்தைச் சார்ந்த குழந்தைகளுக்கு மேற்குறிப்பிட்ட சலுகைகள் கிடைப்பதில்லை. எனவே இதைக் கருத்தில்கொண்டு அரசாங்கம் நிர்ணயித்துள்ள பிற்பட்டோர் பட்டியலில் கவுண்டர் சமுதாயத்தையும் சேர்த்துக் கொள்ள அரசாங்கம் முன்வருமா?